# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# தமிழ் வளர்ச்சி

## மானியக் கோரிக்கை எண்–46

அறிவிப்புகள்
2021–2022

**தங்கம் தென்னரசு**
தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்

1. 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இதற்கென சிறப்பு நிதியாக ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் ஊடகங்கள் வாயிலாகத் திருக்குறள் இன்றைய தலைமுறை யினரைச் சென்றடையும் வகையில் தொலைக்காட்சிகளுடன் இணைந்தும் இணைய வடிவிலும் அசைவூட்டும் படங்கள், வினாடி வினா, குறும்படங்கள், நடனம் போன்ற கலை வடிவங்களோடு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இதற்கென சிறப்பு நிதியாக ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. அயல்நாடு மற்றும் வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க 'தமிழ் பரப்புரைக் கழகம்' உருவாக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

உலகில் சுமார் 94 நாடுகளில் தமிழர்கள் வசிக்கின்றனர். அந்நாடுகளில் அவர்கள் தமிழை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதில் சிக்கல்கள் உள்ளன. கற்பதற்கான வசதிகள் இல்லாமை, தமிழறிந்த ஆசிரியர்கள் இல்லாமை, தேவையான தமிழ்ப் பாடநூல்கள் இல்லாமை என இருக்கும் சிக்கல்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழை வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அனுப்பி வைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ் மொழியை இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழிகளாகக் கற்பிக்க 'தமிழ் பரப்புரைக் கழகம்' உருவாக்கப்படும். அகரம் முதல் சிகரம் வரை எனப் பல படிநிலைகளாகப் பாடங்கள் கற்பிக்கப்பட்டுச் சான்றிதழ் தேர்வும் நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. பள்ளி மாணவர்கள் தங்களின் தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் 'திறனறித் தேர்வு' நடத்தி ஆண்டுதோறும் 1500 பேர் தெரிவு செய்யப்பட்டு இரண்டாண்டுகளுக்கு ஊக்கத் தொகையாகத் திங்கள் தோறும் ரூபாய் 1,500 வழங்கப்படும்.**

பள்ளி மாணவ, மாணவியர்கள் அறிவியல், கணிதம் சார்ந்த ஒலிம்பியாட்டு தேர்வுகளுக்குப் பெருமளவில் தயாராகிப் பங்குபெறுவதைப் போன்று தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் 'திறனறித் தேர்வு' நடத்தப்படும். இத்தேர்வின் மூலம் ஆண்டுதோறும் 1,500 மாணவர்களைத் தெரிவு செய்து மாதம் ரூபாய் 1,500/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்திற்கு 2021–2022ஆம்

ஆண்டு ரூபாய் 2 கோடியே 70 இலட்சமும், 2022-2023ஆம் ஆண்டு முதல் தொடர் செலவினமாக ரூபாய் 5 கோடியே 40 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. திருக்குறள் முற்றோதல் செய்து பரிசுத் தொகை வழங்காமல் நிலுவையில் உள்ள 219 மாணவர்களுக்கு இந்த ஆண்டு குறள் பரிசு வழங்கப்படும். அடுத்த ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு, பரிசுத் தொகை உயர்த்தப்படும்.**

திருக்குறள் முற்றோதும் மாணவர்களுக்கு வழங்கப்படும் குறள் பரிசிற்குத் தெரிவு செய்யப்பட்டு, பரிசுத் தொகை வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள 219 மாணவர்களுக்கு இந்த ஆண்டு பரிசுத் தொகை வழங்கப்படும். அடுத்த ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு, பரிசுத் தொகை உயர்த்தப்படும்.

**5. தமிழ் அறிஞர்களான சிலம்பொலி சு.செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ. இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, பரிவுத் தொகை வழங்கப்படும்.**

தமிழ் அறிஞர்களான சிலம்பொலி சு.செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ. இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, பரிவுத் தொகை வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. சங்க இலக்கிய வாழ்வியல், ஓவியங்களாகவும் எளிய விளக்கத்துடனும் காஃபி மேசைப் புத்தகமாக வெளியிடப்படும். இதற்கென ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

சங்க இலக்கிய வாழ்வியலை எடுத்துரைக்கும் வகையில் புகழ்மிக்க ஓவியர்களைக் கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டு, எளிய விளக்கவுரையுடன் உயர்தர அச்சு நூலாக வெளியிட (Coffee table book) நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 7. திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்புகள் நடத்தப்படும்.

தமிழின் வாய்ப்பாட்டு மரபை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் வண்ணம் திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்புகளும் அறநிலையத் துறையுடன் இணைந்து நடத்தப்படும்.

**8. தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்களின் பிறந்த நாளன்று இலக்கியக் கூட்டங்கள் நடத்திட ரூபாய் 15 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும்.**

தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் நினைவிடங்களில் அவர்களின் பிறந்தநாளன்று உள்ளூர் இலக்கிய அமைப்புகள் மூலம் ஆண்டுதோறும் கவியரங்கம், கருத்தரங்கம், இலக்கியக் கூட்டங்கள் 150 இடங்களில் நடத்தப்படும். ஒரு கூட்டத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் வீதம் நிதியுதவி அளிக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்களின் ஒலி / ஒளிப் பொழிவுகள் ஆவணமாக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி / ஒளிப் பொழிவுகள் சேகரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டு இணையத்தில் அனைவரும் அணுகும் வகையில் ஆவணமாக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. [illegible] இலக்கியங்கள் சந்தி பிரிக்கப்பட்டு நூல்களாக அச்சிட்டுக் குறைந்த விலையில் வெளியிட ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

சங்க இலக்கியங்களைச் சந்தி பிரித்து எளிமைப் பதிப்புகளாகவும் திராவிடக் களஞ்சியம் என்ற தொகுப்பு நூலையும் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**11. தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதும் நடைமுறையை அனைவரும் பின்பற்ற ஊக்குவிக்கப்படும்.**

தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதும் நடைமுறையைப் பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களும் பொதுப் பயன்பாடுகளில் இம்முறையைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படும்.

**12. வணிக நிறுவனங்களில் வழங்கப்படும் பற்றுச் சீட்டுகள் தமிழிலும் அச்சிட்டு வழங்கப்படவும், குடியிருப்பு அடுக்ககங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்குத் தமிழில் பெயர் சூட்ட ஊக்குவிக்கப்படவும் வழிமுறைகள் உருவாக்கப்படும்.**

வணிக நிறுவனங்களில் வழங்கப்படும் பற்றுச் சீட்டுகள் தமிழிலும் அச்சிட்டு வழங்கப்படவும், குடியிருப்பு அடுக்ககங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்குத் தமிழில் பெயர் சூட்ட ஊக்குவிக்கப்படவும் வழிமுறைகள் உருவாக்கப்படும்.

**13. அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பெறப்பட்ட முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்புகள் தமிழில் தொகுத்துத் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக இணையத்தில் வெளியிடப்படும்.**

அனைத்துப் பல்கலைக்கழகங்களும் அனைத்துத் துறைகளின் முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கங்களைத் தமிழில் தொகுத்து வெளியிடுவதோடு, இனிவரும் காலங்களில் முனைவர் பட்ட ஆய்வேடு அளிக்கப்படும் போது, அவ்வாய்வேட்டின் ஒரு பகுதியாக ஆய்வுச் சுருக்கமும், கலைச்சொல் பட்டியலும் இடம் பெறச் செய்யவேண்டும். இனிவரும் ஆண்டுகளில் ஆண்டுதோறும் பல்கலைக்கழகங்கள் இத்தகைய தமிழ் ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்பைத் தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு மென் நகலியாக (Soft copy - MS word format) அனுப்பி வைக்க வேண்டுமென ஆணையிடப்படும்.

## 14. பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் ஒலி நூல்களாக வெளியிட ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.

பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்கள் ஒலி நூல்களாக (Audio Book) வெளியிடப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ், புதிய கலைச்சொற்கள் உருவாக்கம் இணைய வழியில் அறிமுகம். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ், புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தை இணைய வழியில் அறிமுகம் செய்து மொழியியல் அறிஞர்கள், துறைசார் வல்லுநர்கள், தமிழ் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் அடங்கிய தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுக் கலைச்சொற்கள் தரப்படுத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**16. தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் நூல்கள் எளிதாகவும் ஒரே இடத்தில் தொகுப்பாகவும் கிடைக்கப் பெற வழிவகை செய்யப்படும். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.**

செந்தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கண நூல்களான தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் நூல்கள் தமிழ் ஆர்வலர்களுக்கும், இளையத் தலைமுறையினருக்கும், பொது மக்களுக்கும் எளிதாகவும் ஒரே இடத்தில் தொகுப்பாகவும் கிடைக்கப்பெற வழிவகை செய்யப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 81 இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்படும்.**

நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்களின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். பேச்சுப் போட்டியில்

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு என்று சிறப்புப் பரிசு ஒன்றும் ஏற்படுத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 81 இலட்சத்து 60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. தமிழைப் பிறமொழியினருக்குக் கற்பிக்கும் வகையில் திராவிட மொழிகள் உட்பட பிறமொழிகளில் பாடநூல்களும், பன்மொழி அகராதியுடன் தமிழ் கற்பிக்கும் குறுஞ் செயலிகளும் உருவாக்கப்படும்.**

தமிழைப் பிறமொழியினருக்குக் கற்பிக்கும் வகையில் திராவிட மொழிகள் உட்பட பிறமொழிகளில் பாடநூல்களும், பன்மொழி அகராதியுடன் தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலிகளும் உருவாக்கப்படும்.

தொடர் திட்டம்

**19. சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தில் வெளியிடப்படும்.**

விக்சனரி, விக்கிமூலம், விக்கிப்பீடியா உட்பட சர்வதேசக் கட்டற்ற களஞ்சியங்களைப் பயன்படுத்திக் கொண்டு இணையத்தில் தமிழின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தில் வெளியிடப்படும்

தொடர் திட்டம்

## 20. ஆட்சிச் சொல் அகராதி திருந்திய பதிப்பு மற்றும் அரசுத் துறைகளின் புதிய கலைச்சொற்கள் தொகுத்து வெளியிடப்படும்.

ஆட்சிச் சொல் அகராதி திருந்திய பதிப்பு இந்தாண்டு வெளியிடப்படும். மேலும், அரசுத் துறைகளின் புதிய கலைச்சொற்களைத் தொகுத்து ஆட்சிச் சொல் குறு நூலாகத் தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது ஆண்டுதோறும் வெளியிடப்படும்.

தொடர் திட்டம்

**தங்கம் தென்னரசு**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்